# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண்கள். SA 5078/SCIC/2023 & SA 5077/SCIC/2023</u>**

திரு தே.சண்முகம் த/பெ.தேவன கவுண்டர்
6-A, அங்கம்மாள் லே-அவுட் — மேல்முறையீட்டாளர்
லாலி ரோடு
கோயம்புத்தூர் - 641 003.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் -------- பொது அதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
கணபதி, கோயம்புத்தூர்-641 006.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 21/04/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **9. வழக்கு எண்.5078/SCIC/2023-ஐப் பொறுத்த வரையில், அன்றைய (15/04/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.கா.செல்வராஜ், சார் பதிவாளர், கணபதி அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 28/12/2022 மற்றும் 20/02/2023 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார். அதற்கு மனுதாரர், வழங்கப்பட்ட தகவல் சரியானதல்ல என்றார்.**

மனுதாரர், முக்கியமாக, தான் தடங்கல் மனு சமர்ப்பித்திருந்தும், குறிப்பிட்டுள்ள சொத்து, எவ்வித வழக்கும் நிலுவையில் இல்லை என்று குறிப்பிடப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் ADM I, கோயம்புத்தூர்-ல் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், அதனை மறைத்து, தடங்கல் மனு அளித்திருந்த நிலையிலும், பத்திரப்பதிவு நடைபெற்றதாகத் தெரிவித்தார். மேலும், மனுதாரர் பத்திரப்பதிவுச் சட்டம் பிரிவு 81ஐ மேற்கோள் காட்டினார். அதற்கு, அன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கூறும் தடங்கல் மனுவை கண்டுபிடிக்க இயலவில்லை எனத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தான் 07/07/2022 தேதியிட்டு சமர்ப்பித்த தடங்கல் மனுவின் நகலையும், அது தொடர்பான ரசீதின் நகலையும் சமர்ப்பித்தார். பொதுத் தகவல் அலுவலர், தடங்கல் மனு தமது அலுவலகத்தில் இல்லை, என்று கூறுவதை ஆணையம் ஏற்கவில்லை. எனவே, 15/04/2025 அன்று கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

*10. எனவே, துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்கள் மேற்குறித்த பிரச்சினை சம்பந்தமாக முழுமையான விசாரணை நடத்துவதோடு, மனுதாரர் அளித்த தடங்கல் மனுவின் மீது நடவடிக்கை எடுக்காததற்கான காரணம் என்ன ? எந்த சூழ்நிலையில் மனுதாரர் குறிப்பிடும் சொத்து பத்திரப்பதிவு செய்யப்பட்டது ? என்பதை கண்டறிந்து முழுமையான விசாரணை அறிக்கையினை 03/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும். இத்துடன் மனுதாரரின் 07/07/2022 தேதியிட்டு சமர்ப்பித்த தடங்கல் மனுவின் நகல் மற்றும் அது தொடர்பான ரசீதின் நகல் இணைத்து அனுப்பப்படுகிறது. 03/06/2025 தேதிய விசாரணைக்கு (1) மனுதாரர், (2) துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம், (3) சார்பதிவாளர், கணபதி சார்பதிவகம் ஆகியோருக்கு ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும்.*

11. இந்நிலையில், SA 5077/SCIC/2023-ஐப் பொறுத்த வரையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 21/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டிருந்தது.

12. இன்றைய (21/04/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.கா.செல்வராஜ், சார் பதிவாளர், கணபதி அவர்கள் ஆஜரானார். மனுதாரர் தாக்கல் செய்திருந்த இதே பொருண்மை கொண்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான வழக்கு எண். SA 5078/SCIC/2023 ஆணையத்தால் 15/04/2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களுக்கு மேற்கண்ட பத்தி-10-ல் கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்சொன்ன SA 5078/SCIC/2023 வழக்குடன், இந்த SA 5077/SCIC/2023 வழக்கும் இணைத்துக் கொள்ளப்படுகிறது. எனவே, பத்தி 10-ல் கண்ட உத்தரவு SA 5077/SCIC/2023 வழக்கிற்கும் பொருந்தும் என்பதை மனுதாரரிடம் இன்று தெரிவிக்கப்பட்டது. எனவே, இந்த (SA 5077/SCIC/2023 & SA 5078/SCIC/2023), இரண்டு வழக்குகளின் விசாரணை 03/06/2025-க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

2. மேற்குறிப்பிட்டவாறு இன்றைய விசாரணைக்கு (03/06/2025) மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் சார்பில் திரு.நா.ஸ்ரீராம், சார்பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர்

அலுவலகம், கோவை (வடக்கு) மற்றும் திரு.கே.செல்வராஜ், சார்பதிவாளர், கணபதி சார்பதிவகம், கோவை (வடக்கு) ஆகியோர் ஆஜராகி, 30/05/2025 தேதியிட்ட விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்தார். விசாரணையின்போது, ஆணையம் உத்தரவிட்டவாறு, இன்று துணைப் பதிவுத்துறைத் தலைவரின் பிரதிநிதி மேற்குறிப்பிட்ட விசாரணை அறிக்கையின் நகல் ஒன்றை மனுதாரரிடம் வழங்கினார். துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் விசாரணை அறிக்கையினை ஆணையம் பரிசீலனை செய்த போது, ஆணையத்தால் நடத்தப் பெற்ற விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்த வாதுரையின்படி மனுதாரரிடமிருந்து பெற்ற தடங்கல் மனு பற்றி எவ்வித விவரமும் இடம் பெறவில்லை. எனவே, துணைப் பதிவுத்துறைத் தலைவரின் விசாரணை அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள மனுதாரரின் தடங்கல் மனு பற்றிய குறிப்பைப் பொறுத்த வரை ஆணையம் ஏற்கவில்லை.

3. எனவே, துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்கள் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரிடமிருந்து தடங்கல் மனு பெறப்படவில்லை என்பது குறித்து மேலெழுந்தவாரியான வாக்குமூலம் அளித்துள்ளது பற்றி புதிதாக விசாரணை மேற்கொள்வதோடு, அதுகுறித்த அறிக்கையினை 26/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. ஏற்கெனவே, இப்பொருண்மை குறித்து 21/04/2025 தேதிய ஆணையத்தின் ஆணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தும், துணைப் பதிவுத்துறைத் தலைவரின் விசாரணை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மற்ற தகவல்களைப் பொறுத்தவரையில், துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் அறிக்கையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. மனுதாரர், இவ்வாணையினை வைத்துக் கொண்டு, துறையின் உயர் அதிகாரிகளையோ அல்லது நீதிமன்றத்தையோ அணுகி, தனது கோரிக்கையினை நிவர்த்தி செய்து கொள்ள ஆணையம் அறிவுறுத்துகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**வழக்கு எண்கள். SA 5078/SCIC/2023 & SA 5077/SCIC/2023**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
கணபதி, கோயம்புத்தூர்-641 006.

2.துணைப் பதிவுத்துறைத் தலைவர்
கோயம்புத்தூர் மண்டலம்
கோயம்புத்தூர்.

**மேல்முறையீட்டாளர்**

திரு D.சண்முகம் த/பெ.தேவன கவுண்டர்
6-A, அங்கம்மாள் லே-அவுட்
லாலி ரோடு
கோயம்புத்தூர் - 641 003.

RG/PC